

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 95– திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 28 – வியாழக்கிழமை 14 நவம்பர் 2024 – திருச்சி ★★ 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 95 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 28 - Thursday 14 November 2024 - Trichy ★★ 16+8 Pages ₹5.00


# மக்கள் நம் பக்கம்! மாற்று முகாம் கலக்கம்!





## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

“மாதம் மும்மாரி பொழிந்ததா?” என்று அரண்மனை உப்பரிகையில் நின்று வேடிக்கை பார்த்தபடி மந்திரிமார்களிடம் நிலவரம் கேட்கும் ஆட்சியல்ல இது. அன்றாடம் மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை வகுத்து, அவை முறையாகச் செயல்படுகிறதா என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச்சென்று கள ஆய்வு செய்து, பணிகளை நிறைவேற்றிடும் ஜனநாயக மாண்புமிக்கது நம் திராவிட மாடல் ஆட்சி.

**இந்த ஆட்சியைப் பற்றி அரசியல் களத்தில் வைக்கப்படும் விமர்சனங்களுக்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாத வகையில், ஆட்சியின் தன்மையை மக்களின் முகமலர்ச்சியே பதிலாகச் சொல்லிவிடுகிறது. அந்த முகமலர்ச்சியானது அவர்களின் உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சியின் மொழிபெயர்ப்பு.**

கோவையில் நவம்பர் 5, 6 தேதிகளில் நடைபெற்ற அரசுப் பணிகள் கள ஆய்வு, கழகப் பணிகள் கலந்தாய்வு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மக்களின் வரவேற்பு, உடன்பிறப்புகளுடனான சந்திப்பு எனச் சென்ற இடமெல்லாம் மகிழ்ச்சியும் எழுச்சியும் நிறைந்திருந்ததுபோலவே, நவம்பர் 9, 10 ஆகிய நாட்களில் விருதுநகர் மாவட்டத்தில் மேற்கொண்ட பயணமும் முழுமையான வெற்றியாக அமைந்ததை உடன்பிறப்புகளாம் உங்களிடம் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

தென்மாவட்ட மண்ணுக்கேயுரிய பாச உணர்வுடன் மக்களின் பேரன்பை விருதுநகர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேரில் கண்டேன். கழகத்தின் மருதிருவர் என்று நான் அடிக்கடி குறிப்பிடும் விருதுநகரின் இரண்டு மாவட்டச் செயலாளர்களான மாண்புமிகு அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

ஒரு முறை தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்ற போது, அங்குத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களையும் அங்குப் பணியாற்றும் தொழிலாளர்களையும் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து, அவற்றை நிறைவேற்றியது நம் திராவிட மாடல் அரசு. அதுபோல, விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலைகள் நிறைந்திருப்பதால், 9-ஆம் தேதியன்று ஒரு தொழிற்சாலைக்குச் சென்று அங்குள்ள நிலவரத்தை நேரில் கேட்டறிந்தேன்.

தீபாவளிப் பண்டிகையையொட்டி இந்த ஆண்டு பட்டாசு விற்பனை நன்றாக இருந்ததாகவும், மக்களிடம் வாங்கும் சக்தி பெருகியிருப்பதாகவும் பட்டாசு ஆலையின் உரிமையாளர் தெரிவித்தார். அங்கே பணியாற்றிய தொழிலாளர்களின் தேவை குறித்து கேட்டேன். எதிர்பாராத வகையில் **விபத்தில் இறந்து போகும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி கற்பதற்கான செலவுகளை அரசே ஏற்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் வைத்தனர். அதில் உள்ள நியாயத்தை உணர்ந்து, பட்டாசு ஆலை விபத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகளின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் வகையில், மாவட்ட நிர்வாக அளவிலேயே ஒரு நிதியம் உருவாக்கவும், அந்த நிதியத்திற்கு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும் அறிவிப்பு வெளியிட்டேன். பட்டாசுத் தொழிலாளர்களின் அகத்திலும் முகத்திலும் மத்தாப்பாக ஒளிர்ந்தது அந்த அறிவிப்பு. உங்களில் ஒருவனான எனக்கோ, ஒரு விளக்கை ஏற்றி வைத்த உணர்வு.**

கள ஆய்வுப் பணிகளின்போது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட மக்கள் நலனுக்கான திட்டங்களில் பயனாளிகளின் எண்ணிக்கையையும், பயனாளிகளிடம் அவை முறையாகச் சென்று சேர்வதையும் உறுதிப்படுத்திக் கொண்டு, கூடுதல் விண்ணப்பங்கள் மற்றும் மக்களின் பிற தேவைகளைக் கவனித்து, தகுதியுடையவற்றை விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தினேன்.

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த ஓராண்டில் நடைபெற்ற பிரசவங்களில் ஒரு குழந்தைகூட இறக்காத வகையில் மகப்பேறு துறை சார்ந்தவர்கள் பொறுப்புடனும் சிறப்புடனும் செயல்பட்டிருக்கும் விவரத்தை அறிந்தேன். அதுபோலவே, பட்டாசு ஆலைகளுக்குச் செல்லும் சிறுவர் - சிறுமியர் நிறைந்த மாவட்டத்தில் அவர்களின் பள்ளிப்படிப்பும் உயர்கல்வியும் இடைநின்று போகாதபடி அதிகாரிகளும் ஆசிரியர்களும் வீடுவீடாகச் சென்று தொடர் முயற்சிகளை மேற்கொண்டு,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# கடும் மழை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன!


## ஆய்வுக்குப்பின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ.14 -**

**சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழை காரணமாக மழைநீர் எங்கும் தேங்கவில்லை என்றும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



நேற்று முன்தினம் (12.11.2024) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**இந்த ஆய்வுக்குப் பின்னர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-**

அடுத்த 4 நாட்களுக்கு தமிழ்நாடு முழுவதும் மிக கனமழை பெய்யும் என்று IMD (India Meteorological Department) கணித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் காலை 7.30 மணி நிலவரப்படி பல மாவட்டங்களில் மழை பதிவாகவில்லை. சராசரியாக சென்னையில் 3.60 செ.மீ., தென் சென்னையில் சராசரி 5.5 செ.மீ, பெருங்குடியில் 7.35 செ.மீ., மழை பெய்திருக்கிறது. அதேபோல, செங்கல்பட்டில் 1.06 செ,மீ., திருவள்ளூரில் 0.6 செ,மீ., காஞ்சிபுரத்தில் 0.5 செ.மீ., உள்ளிட்ட சில மாவட்டங்களில் மிதமான மழை பெய்திருக்கின்றது.

நம்முடைய முதலமைச்சரின் கட்டளையின்படி நேற்று GCCஇல் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை (ICCC) ஆய்வு செய்திருக்கின்றோம். முன்னேச்சரிகை நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்தோம். 1,194 மோட்டார் பம்புகள், 158 சூப்பர் சக்கர் இயந்திரங்கள், 524 ஜெட் ரோடிங் (Jet Rodding) இயந்திரங்களும் தயாராக உள்ளன. இது அக்டோபர் மாதம் பெய்த மழைக்கு பயன்படுத்தி இருந்ததை விட 21 சதவிகிதம் அதிகமாக்கி இருக்கின்றோம்.

அதேபோல, Previous October மழை அனுபவத்தின் அடிப்படையில், கண்காணிப்பு அதிகாரிகளின் அறிக்கையின் அடிப்படையில், கூடுதல் மோட்டார்களை mobilise செய்துள்ளோம்.

GCC சார்பில், 329 நிவாரண மையங்கள் தயார் நிலையில் இருக்கின்றன. 120 உணவு தயாரிப்பு மையங்களும் தயார் நிலையில் உள்ளன. கடந்த அக்டோபர் மாதம் 98 ஆக மையங்கள் இருந்தது, அதையும் உயர்த்தியிருக்கின்றோம். சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில், கணேசபுரம் சுரங்கப் பாதை தவிர, மற்ற 21 சுரங்கப்பாதைகளில் வழக்கமான போக்குவரத்து போய்க் கொண்டிருக்கிறது. அதுவும், ரயில்வே மேம்பாலம் பணியை மேற்கொள்வதற்காக கணேசபுரம் சுரங்கப்பாதை மூடப்பட்டுள்ளது. காலை 9:30 மணி வரை எந்த பகுதியிலும் பெரிதாக தண்ணீர் தேங்கவில்லை. இருப்பினும் நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

Chennai Corporation Commissioner, GCC TEAM, அமைச்சர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் இப்படி அனைவரும் களத்தில் இருக்கின்றோம். மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்த அனைத்து விரைவான நடவடிக்கைகளையும் கண்டிப்பாக எடுப்போம். மக்களும், பத்திரிகை நண்பர்களும், ஊடகங்களும் எங்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கால்வாய்களில் தூர்வாரும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கால்வாய்களில் தூர்வாரும் பணிகளை முடித்துவிடுவோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக திருச்சி, மதுரை, தஞ்சாவூர் இங்கெல்லாம் மழை பெய்து கொண்டிருந்தது. இப்போது எழிலகம் மாநில செயல்பாட்டு மையத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன். இப்போதைக்கு, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் அருகில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் மட்டும்தான் அதிக கனமழை எதிர்ப்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் இன்னும் செய்திகள் வரவில்லை.

சமூக ஊடகங்களில் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு உடனுக்குடன் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரியளவில் புகார்கள் ஏதும் வரவில்லை. GCCயில் மொத்தம் 22,000 நபர்கள் பணியில் இருக்கின்றனர். மழைநீர் சேகரிப் பிறகாகதான், மழைநீர் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்து கட்டிடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.